©
தமிழ்நாடு அரசு
2017

பதிவெண்: எம். 312

நீலகிரி மாவட்ட அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது

உதகமண்டலம், ஜூன் 1, 2017
[ஹேவிளம்பி, வைகாசி 18- திருவள்ளுவர் ஆண்டு 2048] [எண் 1

அரசு அறிவிக்கை

அரசாணை (நிலை) எண். 75, நாள் : 16—5—2017

நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சகம்.

(நுகர்வோர் விவகாரங்கள் துறை)

ஆணை

புது தில்லி, 25–04–2017

S.O. 1288 (E) :- 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு, 2016 ஆம் ஆண்டு சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் மீதான உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் ஆணையில் திருத்தம் செய்வதற்கு, பின்வரும் ஆணையை, இதனால் பிறப்பிக்கிறது. அவையாவன :—

1. (1) இந்த ஆணை 2017 ஆம் ஆண்டு சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் மீதான உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் ஆணை என்று அழைக்கப்படும்.

(2) இந்த ஆணை 29—04—2017 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

2. 2016 ஆம் ஆண்டு சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் மீதான உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் ஆணையின் 3 ஆம் பகுதியைச் சேர்ந்த துணைப்பகுதி (2) இல், இனம் (ii) க்குப் பதிலாகப் பின்வரும் இனம் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது :—

"சர்க்கரையைப் பொறுத்தவரையில் 28—10—2017 ஆம் நாள் வரையிலான கால அளவிற்கு"

[கோப்பு எண். S-10/1/2017-ECR&E]

பி.வி. ராமா சாஸ்திரி
இணைச் செயலாளர்

(ஆளுநரின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

நெல்லியாளம் நகராட்சி

ந.க.எண்.338/2017 நாள்.17/03/2017

நகர்மன்ற தீர்மான ஏண்:86/2017, நாள்.28/02/2017, அங்கீகரிக்கப்பட்டது.

திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016

நெல்லியாளம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 கீழ் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)ல், பிரிவு 3, 6 மற்றும் 25களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு திடக்கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த, திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 ஐ இயற்றியுள்ளது. இந்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு நகராட்சியும் தனது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில், நகராட்சி கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், தரம்பிரித்தல், எடுத்துச்செல்லுதல், செயலாக்கம் மற்றும் இறுதியாக்கம் செய்தல் போன்ற பணிக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ல் குறிப்பிட்டுள்ளவாறு கழிவுகளை உருவாக்குபவர் அந்தந்த நகராட்சி நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து கழிவுகளை, கண்ட இடங்களில் கொட்டாமல் தவிர்க்கவும், கழிவுகளை தரம்பிரித்து நகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள முறைப்படி அப்புறப்படுத்தவும் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நெல்லியாளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி தனிநபர் குடியிருப்பு, வணிக வளாகங்கள், உணவு விடுதிகள், சிற்றுண்டி சாலை, மருத்துவமனைகள், மொத்த வணிகர்கள், சில்லரை வணிகர்கள் மற்றும் அனைத்து வணிகர்கள் உட்பட அனைவரும் நெல்லியாளம் நகராட்சியை தூய்மையான நகராட்சி பகுதியாக்க திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி திடக்கழிவுகளை மேலாண்மை செய்தல் முறைப்படுத்தப்பட்டு உள்ளது. இதன்படி நகராட்சி திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016ன் பிரிவு 4ன்படி கழிவை உருவாக்குபவர், அதனை குப்பையாக வெளியே போடுவதை தவிர்க்கும் பொறுப்புடையவராவர் அவர் அதிகார அமைப்பினால் அறிவிக்கப்பட்ட சேகரித்தல் மற்றும் பிரித்தல் முறைக்கு இணங்கி கழிவை ஒப்படைப்பு செய்ய உறுதி செய்ய வேண்டியவராவார்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அத்தியாயம் VIII பிரிவு 153, 156, 157, 158, 160 மற்றும் 161ன்படி, நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவுகளை அகற்ற போதிய ஏற்பாடுகள் செய்யவும், திடக்கழிவு சேவையில் ஈடுபட்டு பொது சுகாதாரம் பேணி சுற்றுச்சுழலை பாதுகாக்கும் செலவினத்தை அதன் பொறுப்பாளர்களிடம் இருந்து பணம் வசூலித்து செயல்படுத்தவும், நச்சுத் தன்மை உடைய கழிவுகளையோ, அழுகிய கழிவுகளையோ, மலக்கழிவுகளையோ, மருத்துவக்கழிவுகளையோ மாற்றம் செய்தல், சாலைகளில் போடுதல் மற்றும் வடிகால்வாய்களில் கொட்டுதல் ஆகியவை தடை செய்யப்படுகிறது. மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை மற்றும் அபராதம் விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் சுத்தமாகவும், வடிகால்வாய் தங்கு தடையின்றி செயல்படவும், நிலத்தடி நீர் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரம் ஆகியவை மாசுபடுவதை தவிர்க்கவும், பொது சுகாதாரம் பாதுகாக்கவும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி நகர்மன்றம் ஆணையாளருக்கு திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாட்டிற்கு தனிநபர் குடியிருப்புகள் மற்றும் வணிகர்களிடம் இருந்து திடக்கழிவு மேலாண்மை கட்டணம் வசூலிக்கவும் துணை விதிகளின்படி நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் வழங்கியுள்ளது.

நெல்லியாளம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306ன் கீழ் இயற்றப்பட்டது.

1.0 தலைப்பு(Title) : இது நெல்லியாளம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகள் 2016 என்று அழைக்கப்படும்.

2.0 செயல்பாடு எல்லை (Extent of application:- இந்தத் துணைவிதிகள் நெல்லியாளம் நகரின் எல்லைக்கு உட்பட்ட அனைத்துப் பொது இடங்களுக்கும் மற்றும் நகரத் திடக் கழிவுகள் ஏற்படுத்தும் அனைவருக்கும் மற்றும் நெல்லியாளம் நகராட்சி எல்லைக்குள் தனியார் உரிமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் அனைத்து வளாகங்களுக்கும் பொருந்தும்.

திடக்கழிவு மேலாண்மை சேவைக்கட்டணம்

அட்டவணை-I

வ.எண்.	பொருள்	காலம்	கட்டணம்
(1)	(2)	(3)	(4)
1. குடியிருப்பு			ரூ.
அ	தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.500 க்குள்)	மாதம் ஒன்றிற்கு	10.00
ஆ	தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.501 – 1000 க்குள்)	மாதம் ஒன்றிற்கு	20.00
இ	தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.1001 – 2000 க்குள்)	மாதம் ஒன்றிற்கு	30.00
ஈ	தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.2001 மேல்)	மாதம் ஒன்றிற்கு	50.00
2. நிறுவனம்			
அ	தனியார் பள்ளி, கல்லூரி மற்றும் தனியார் அலுவலக வளாகம்	மாதம் ஒன்றிற்கு	200.00
ஆ	மருத்துவமனை (படுக்கையுடன்)	மாதம் ஒன்றிற்கு	250.00
இ	கிளினிக்	மாதம் ஒன்றிற்கு	150.00
3. வணிகம்			
அ	தேநீர் விடுதி / சிற்றுண்டி சாலை	மாதம் ஒன்றிற்கு	100.00
ஆ	நடமாடும் உணவகம்	தினமும்	10.00
இ	உணவகம் சிறியது	மாதம் ஒன்றிற்கு	200.00
ஈ	உணவகம் பெரியது	மாதம் ஒன்றிற்கு	500.00
உ	திருமண மண்டபம் சிறியது	மாதம் ஒன்றிற்கு	500.00
ஊ	திருமண மண்டபம் பெரியது	மாதம் ஒன்றிற்கு	750.00
எ	தையல் கடை	மாதம் ஒன்றிற்கு	25.00
ஏ	இருசக்கர வாகன பழுது நீக்கும் கடை	மாதம் ஒன்றிற்கு	25.00
ஐ	மோட்டார் வாகனம் பழுது நீக்கும் இடம்	மாதம் ஒன்றிற்கு	75.00
ஒ	பலசரக்கு	மாதம் ஒன்றிற்கு	150.00
ஓள	ஸ்டேஷனரி / மருந்தகம்	மாதம் ஒன்றிற்கு	75.00
4. மற்றவை			
அ	சிக்கன் ஸ்டால்	மாதம் ஒன்றிற்கு	250.00
ஆ	பீப் / மட்டன் / மீன்	மாதம் ஒன்றிற்கு	100.00
இ	ஜவுளி கடை வியாபாரம்	மாதம் ஒன்றிற்கு	150.00
ஈ	தோல் பை விற்பனை, தயார் செய்தல், காலணி விற்பனை	மாதம் ஒன்றிற்கு	50.00
உ	மரக்கழிவுகள்	லோடு ஒன்றிற்கு	500.00
ஊ	தோட்டக்கழிவுகள்	லோடு ஒன்றிற்கு	250.00
எ	வீட்டுத் தோட்டக்கழிவுகள்	லோடு ஒன்றிற்கு	500.00

குறிப்பு :

அ) 1 முதல் 4 வரை பட்டியலிடப்பட்டதில் புதியவகை குப்பை உற்பத்தியாளர்களுக்கு சேவைக்கட்டணம் மன்ற ஒப்புதலுடன் வசூலிக்கப்படும்.

ஆ) ஒவ்வொரு வருடமும் 10 சதவீதம் சேவைக்கட்டண அதிகரிப்பு அமல்படுத்தப்படும்.

திடக்கழிவு மேலாண்மை அபராதக் கட்டணம்

அட்டவனை – II

வ.எண்.	துணை விதிகள்	துணை விதிகள் விளக்கம்	சட்டத்தை மீறினால் செலுத்த வேண்டிய அபராதத் தொகை
(1)	(2)	(3)	(4)
1	4(1) (a)	குப்பைகளை பிரித்து வழங்காமல் இருத்தல்	
		வீடுகள்	50.00
		வணிக நிறுவனங்கள்	100.00
		வணிக வளாகங்கள்	200.00
		உயிரி மருத்துவ கழிவை பிரித்து திருத்தம் செய்யாமல் ஒப்படைத்தல்	1000.00
2	4(1) (b)	சுகாதாரக்கழிவுகளை பிரித்து சுகாதாரமான முறையில் வழங்காமல் இருத்தல்	100.00
3	4(1) (c)	கட்டுமான மற்றும் இடிப்பு கழிவுகள் முறையாக அகற்றப்படாமல் இருத்தல்	500.00
4	4(1) (d)	தோட்டக்கலை கழிவுகள், பூங்கா கழிவுகள் முறையாக அகற்றப்படாமல் இருத்தல்	100.00
5	4(1) (e)	தேவையற்ற கழிவுப் பொருள்களை தண்ணீர் தேக்கமடைந்து கொசுப்புழு உருவாகும் வகையில் வைத்தல்	100
		தொடர் குற்றங்களுக்கு	500.00
6	4(1) (f)	பொது இடங்களில் துப்புதல்	50.00
		பொது இடங்களில் சிறுநீர் கழித்தல்	100.00
		திறந்த வெளியில் மலம் கழித்தல்	200.00
7	4(2)	பொது இடங்களில் குப்பைகளை எறிதல் (தனியார்)	100.00
		பொது இடங்களில் குப்பைகளை எரித்தல் (தனியார்)	500.00
		பொது இடங்களில் குப்பைகளை எறிதல் (வணிக நிறுவனம்)	200.00
		பொது இடங்களில் குப்பைகளை எரித்தல் (வணிக நிறுவனம்)	500.00
8	4(4)	பொதுக்கூட்டம் நிகழ்ச்சிக்கு பின் சுத்தம் செய்யாமல் இருப்பது பிரித்து வழங்காமல் இருப்பது	2500.00
9	4(5)	சாலை ஓர வியாபாரிகள் கழிவை பிரித்து வழங்காமல் இருத்தல்	200.00
10	7.1	மீன் / வளர்ப்பு பறவை ஆகியவற்றின் கழிவை குறிப்பிட்ட வகையில் பிரித்து ஒழுங்கு செய்யாமல் ஒப்படைத்தல்	500.00
11	7.2	கொல்கலன் / குப்பைகூடை இல்லாத விற்பனையாளருக்கு / கூவி விற்பவர்களுக்கு	200.00
12	7.3	வீட்டு நீர்கலனை தூய்மையாக வைக்காததற்கு	1000.00
13	7.4	விருப்ப / சொந்த விலங்கால் ஏற்படும் கழிவை சரியாக அப்புறப்படுத்தாதற்கு	500.00
		வளர்ப்பு விலங்குகளை தெருவில் பொது இடங்களில் அலைந்து திரிய விடுதல்	500.00 நாளொன்றுக்கு